MCOP 139/2014
எ.ம.சா.1 சுபாஷ் த/பெ பெரியசாமி
நாள் 14.07.2025

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் எந்த ஊர் என்றால் போளூர் வட்டம் புதூர் கிராமத்தை சேர்ந்தவர். விபத்தில் இறந்து போன மோகன்ராஜை அதற்கு முன்பு எனக்கு தெரியாது. அவர் எந்த ஊர் என்ன வேலை செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக என்மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். போலீசார் வழக்கு விசாரணையை முடித்து என்மீது தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். சந்தேகத்தின் பலனை வைத்து தான் என்னை குற்ற வழக்கில் இருந்து விடுதலை செய்தார்கள் என்றால் சரிதான். என்மீது தவறு இல்லை என்று என்னை விடுதலை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் அதனால் தான் என்மீது போலீசார் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றாலும் சரியல்ல.

**<u>இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். விபத்து 26.04.2014ல் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் என் இருசக்கர வாகனத்திற்கு பதிவு எண் இருந்ததா என்றால் இல்லை. விபத்து நடந்த நேரத்திற்கு 4 மாதங்கள் கழித்து 07.10.2014ல் தான் எனது வாகனத்திற்கு பதிவு எண் வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ1 ஆன பதிவு புத்தகம் 07.10.2014 பதிவு செய்யப்பட்டதாக விவரம் உள்ளது என்றால் சரிதான். 26.04.2014 தேதியன்று எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இருந்தது என்றால் இருந்தது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ2 ஆவணத்தில் 31.03.2013 வரையிலான ஓட்டுநர் உரிமம் இருப்பதாக விவரம் உள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. எனக்கு எதிரே வந்த வண்டிதான் விபத்து ஏற்படுத்துவதற்கு காரணம் என்று TN25AW6636 என்ற வாகனத்தின் மீது நான் புகார் ஏதேனும் கொடுத்து இருக்கிறேனா என்றால் இல்லை. என் மீது நடந்த விபத்து வழக்கில் சந்தேகத்தின் பலன் அளித்து விடுதலை செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது வாகனம் பதிவு செய்யப்படவில்லை என்பதாலும் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் நான் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றாலும் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.